உ

ஓம்



# கூட்டுப் பிரார்த்தனை.

பன்னிரு திருமுறைகளிலும்
மற்றைய அருள் வள்ளலார் பாடல்களில் இருந்தும்
தொகுக்கப்பெற்றவை.

"துன்பமின்றித் துயரின்றி என்றும் நீர்
இன்பம் வேண்டில் இராப் பகல் ஏத்துமின்"

பிலவங்க — வைகாசி

1967

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2

M. R. Suwarnasoundaram
"Minnumekal Illam"
Jaawathai
Pathiny
Karaveddi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்.

# பதிப்புரை.

---

இரண்டு ஆண்டுகளாக எமது மாணவர் வாரம் ஒரு முறை நுணுவில் குளக்கோட்டு சித்திவிநாயகர் கோவில் சந்நிதானத்தில் கூட்டுப்பிரார்த்தனை செய்யத் திருவருள் கூட்டிவைத்ததை நினைந்து அப்பெருமான் திருவடிகளில் எமது வணக்கத்தைச் சமர்ப்பிப்பதோடு, அவ்விதபிரார்த்தனைக்கு வழிகாட்டியாய் இச்சிறு பிரார்த்தனைத்தொகுதி வெளிவருவதையும் பாராட்டுகிறேன்.

இப்பிரார்த்தனை தொடர்ந்து நடைபெறுவதற்கும், இப்பிரார்த்தனைத் தொகுதி வெளிவருவதற்கும் உறு துணையாயிருந்த எமது உடனாசிரியர் திரு. கு. சிவபாதம் அவர்களின் பெருமுயற்சியும் பாராட்டற்பாலது.

ஆ. கணபதிப்பிள்ளை
தலைமை ஆசிரியர்,

கட்டைவேலி,
21-5-67

மு. கி. சிவராமசுந்தரம்
"திருமகள் இல்லம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை.

பாடசாலை மாணவர் உயர்ந்த சமய தத்துவங்களை அறியாவிட்டாலும், அவர்கள் வழிதவறிப் போகாத முறையில் சமயவழிபாடு மிக அவசியம். இவ்வகையில் இப்பாடசாலை கவனம் எடுப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

21-5-67.

மு. கேதுசிகாமணி
வட்டார வித்தியாதிகாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தேவாரம்

பண் – சீகாமரம் திருமுறை – திருஞானசம்பந்தர்

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. 1

பண் – குறிஞ்சி

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல் தீர்வாரே. 2

பண் – கொல்லி

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி யென்மனத் துள்ளவே. 3

பண் – புறநீர்மை

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறுந்தொகை — திருநாவுக்கரசர்

பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 5

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்
அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனே. 6

திருவிருத்தம்

கோவாய் முடுகி அடுதிறற் கூற்றங் குமைப்ப தன்முன்
பூவார் அடிச்சுவ டென்மேற் பொறித்துவை போகவிடில்
மூவா முழுப் பழி மூடுங்கண் டாய்முழங் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ் சிவக் கொழுந்தே.

பண் – தக்கேசி — சுந்தரமூர்த்திநாயனார்

அந்த ணாளன்உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மை கண்டடியேன்
எந்தைநீ எனை நமன் தமர் நலியின்
இவன்மற் றென்னடி யான்என விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொழில்திருப் புன் கூர் உளானே. 8

பண் - குறிஞ்சி

மடித்தாடு மடிமைக்கண் அன்றியே
மனனேநீ வாழும் நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர் செக்கில்
இடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடு கரதலத்தில் தமருகமும்
எரி அகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம்
பெருமானைப் பெற்றா மன்றே. 9

பண் - நட்டபாடை

வெய்யவினை யாயஅடி யார்மேல் ஒழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பையேர்இடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே. 10

## திருவாசகம்

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானே இதற்கு நாயகமே. 11

வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப்பணி கொண்டாய்
வேண்டி நீயாதருள் செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண் டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே. 12

## திருவிசைப்பா

உண்டதே உண்டும் உடுத்ததே உடுத்தும்
அடுத்தடுத் துரைத்ததே யுரைத்தும்
கண்டதே கண்டும் கேட்டதே கேட்டும்
கழிந்தன கடவநா ளெல்லாம்
விண்டதா மரைமேல் அன்னம் வீற்றிருக்கும்
விழவறு வீதிவெண் காடா
அண்டரே காண அம்பலத் தாடும்
ஐயனே உய்யுமா றருளே. 13

நீறணி பவளக் குன்றமே! நின்றன்
நெற்றிக் கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா!
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையு மறிசையே. 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகுங் கழற உழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே. 15

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டர் உள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சில தேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண் மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 16

# திருப்புராணம்

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில். 17

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம். 18

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்

கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை கடிதேகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாக
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வது மொருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடக்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் தரிகடக எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
    வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
    குத்துப்பட வொத்துப் பொரவல        பெருமாளே.

மாதர்வச மாயுற் றுழல்வாரும் மாதவ
    மெண் ணுமற் றிரிவாரும்
தீதகல ஓதிப் பணியாரும் தீநகர
    மீதிற் றிசழ் வாரே
நாத ஒளியேநற் குணசீலா நாரியிரு
    வோரைப் புணர் வேலா
சோதி சிவ ஞானக் குமரேசா
    தோமில்கதிர் காமப் பெருமாளே. 20

## விநாயகர் வழிபாடு

ஒரானைக் கன்றை உமையாள் திருமகனைப்
பேரானைக் கற்பகத்தைப் பேணினல்—வாராத
புத்திவரும் வித்தைவரும் புத்திரசம் பத்துவரும்
சத்திதரும் சித்திதரும் தான். 1

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானேரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை. 2

## விநாயகர் நாமாவளி

ஜய கணேச ஜய கணேச ஜய கணேச பாஹிமாம்
" " " " " " ரட்சமாம் -ஜய
கணநாதம் கணநாதம் ஈஸ்வர புத்ரம் கணநாதம்
விக்ந விநாயக கணநாதம் சித்தி விநாயக கணநாதம்
பார்வதி புத்ரம் கணநாதம் முக்தி பிரதாயக கணநாதம்
மூஷிக வாகன கணநாதம் மோதக ஹஸ்தா கணநாதம்
கணநாதம்

சிவசிவ கெஜமுக கணநாதா, சிவகணவந்தித குணநாதா
வாவா வாவா அங்குசபாசா, வந்தருளின்பந் தந்திடுநேசா
உமைதருபாலா குருமணியே, உந்தனடைக்கலம் அடியோமே
மகாகணபதே குருசரணம், மனம்மகிழ்ந்து வந்தருள் சர
[ணம்
சரணம் சரணம் தந்திமுகா, சரவணபவனுக்குயர் துணைவா
சிவசிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதிஓம் ஜெய கணபதிஓம்
கணபதிஓம் ஜெய கணபதிஓம்
மூஷிக வாகன கணபதிஓம்
மோதக ஹஸ்தா கணபதிஓம்
சாமர கர்ண கணபதிஓம்
விளம்பித சூத்திரா கணபதிஓம்
வாமன ரூபா கணபதிஓம்
மகேஸ்வர புத்திரா கணபதிஓம்
விக்நவிநாயக கணபதிஓம்
பாத நமஸ்தே கணபதிஓம் (கணபதிஓம்)

ஓம் சிவசிவ கெஜமுக கணநாதா
சிவ கண வந்தித குணதீதா
கெங்காதரகர கெஜமுக வர்த்தன
மகாகணபதே பாலயமாம்
ஆனந்த ஐங்கர வந்திடுவாய்
அந்தகன் வாராமற் காத்தருள்வாய்
வாவா வாவா நற்பரனே வா
வந்து நிதம் அருள் தந்திடுவாய்
ஏழைக் கென்றும் அருள் புரிவாய்
ஈசுவரி பாலா ஏரம்பா
உமைதரு பாலா குருமணியே
உந்தன டைக்கலம் அடியோமே
சத்த சமுத்திர மொத்திடு மும்மத
தந்தித் தொந்தி வயிற்றோனே
ஆகுவாகன அம்பிகை வர்த்தன
மகா கணபதே பாலயமாம்
ஒரு கொம்பிரு செவிமும் மதமோ
டோரொரு நால்வாய் ஐங்கரனே
அனுதினமும் அருள் ஐங்கரனே
ஆதி யநாதியோ ரட்சரமே
பார்ப்பதி பாலா வாவா வா
பரபத மெமக்கே தாதா தா
மங்கள மருளுக ஐங்கர முதல்வா
அரிதிரு மருகா குருபர நமநம
மகா கணபதே குருசரணம்
மனம் மகிழ்ந்து வந்தருள் சரணம்
சரணம் சரணம தந்திமுகா
சரவண பவனுக குயர் துணைவா
ஜே ஸ்ரீ சித்திவிநாயக சுவாமிக்கு-ஜே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருளுறு மனமும் கொடிய வெங்குணமும்
மதித்தறி யாததன் மதியும்
இருளுறு நிலையும் நீங்கிநின் அடியை
எந்தநாள் அடைகுவன் எளியேன்
அருளுறும் ஒளியாய் அவ்வெளிக் குள்ளே
அமர்ந்தசிற் பரவொளி நிறைவே
வெருளுறு சமயத் தறியொணச் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 7

ஒருகோட்டன் இருசெவியன் மும்மதத்தன்
நால்வாயைங் கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தருமொருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும்ஒன்
றேவென்னச் செய்யும் தேவே. 8

அஞ்சுமுகத் தான்மகன்மால் அஞ்சுமுகத் தானருள்வான்
அஞ்சுமுகத் தானஞ் சணிகரத்தான் — அஞ்சுமுக
வஞ்சரையான் காணு வகைவதைத்தான் ஓரரையோடு
அஞ்சரையான் கண்கள் அவை. 9

நீடாழி உலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக வங்கூர் எழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ. 10

ஆணி லேஅன் றி ஆருயிர்ப் பெண்ணிலே
அலியி லேயிவ் வடியனைப் போலவே
காணி லேனொரு பாவியை இப்பெருங்
கள்ள நெஞ்சக் கடையனை ஆளையா
ஏணி லேஇடர் எய்த விடுத்தியேல்
என்செய் கேனினி இவ்வுல கத்திலே
வீணி லேயுழைப் பேனருள் ஐயனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசைபாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந் தழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்றவாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன் முடியுந்
திரண்ட முப்புரி நூல் திகழொளிமார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெஞ்ஞான
அற்புதநின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரும் மூஷிகவாகன
இப்பொழுதென்னை யாட்கொள வேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந் தருளி
மாயாப்பிறவி மயக்க மறுத்துத்
திருந்தியமுதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவேவந்தென் னுளந்தனிற் புகுந்து
குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடிவைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந் தெனக்கருளி
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டாவுப தேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத் தங்குச நிலையும்
பேறுநிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்து
கடையிற் சுழிமுனை கபாலமுங் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று மண்டலத்தின் மூட்டிய தூணின்
நான் றெழுபாம்பி னவிலுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண் டெழு மந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண் டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தனியக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்ஷமமும்
எண்முகமாக இனி தெனக் கருளிப்
புரியட்டகாசம் புறப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லாம னோலயந்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்
திருள் வெளியிரண்டுக் கொன்றிடமென்ன
அருடரு மானந்தத் தழுத்தி யென்செவியில்
எல்லையிலாத ஆனந்த மளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத் தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருடனை
நெஞ்சக் கருத்தி னிலையறிவித்துத்
தத்துவநிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

ஜே! ஸ்ரீ சித்திவிநாயக சுவாமிக்கு—ஜே
நமப்பார்வதீ பதயே—அரஹர மஹாதேவ.

ஓம் கணபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# கந்தரனுபூதி.

[ மாயை ஒழிக்க ]

மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகமாறு மொழிந்து மொழிந் திலனே
அகமாடை மடைந் தையரென் றயருஞ்
சகமாயை யுள்நின்று தயங்கு வதே. 1

### தீராப்பிணி தீர.

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. 2

# கந்தரலங்காரம்

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிகருக்குத் துணைமுருகாவெனு நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே. 3

தண்டா யுதமுந்திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த காவந்துபார் சற்றென் கைக்கெட்டவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடாத வேதனுக் கியான்செய்த
குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக்
குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத
கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே
தெரிந்து படைத்தனனே. 5

## முருக வழிபாடு

ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா ஓம்
ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா ஓம்

சரவண பவனே பரதெய்வம்
தரணியில் அவனே மெய்த் தெய்வம்
பத்தற் கிரங்கும் விஸ்வாசன்
பழனிப் பதிவாழ் முருகேசன்
முருகன் திருவடி தரிசனமே
முகதிக் கொருதுணை அறிமனமே
சரவண பவகுக என வருமே
சத்திய ஞானத் திருவுளமே
பவப்பிணி ஒழித்திடும் மருந்துண்டு
பன்னிரு திருக்கரன் திருத்தொண்டு
கதிர் வடிவேலன் திருவடியே
கதிருதம் துணை அதை நீபிடியே
சண்முக சுந்தர வேலவனே
சங்கரி ஈன்றருள் சண்முகனே.
ஆறுமுகன் திருவடி மலர் மறவோம்
அவனியிலே இனி நாம் பிறவோம்
கந்தனை அன்பினை செய்யுங்கள்
சிந்தனை அவனடி வையுங்கள்
வேலாயுதனை வேண்டுங்கள்
வெய்யப் பிறவியைத் தாண்டுங்கள். 6

முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா முருகா முருகா

முருகா சரணம் முருகா சரணம்
முருகா சரணம் முருகா முருகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள் நேயா அம்பிகை புதல்வா
துன்பம் அகற்றிடும் சீலா பாலா
சிவசிவ குமரா முருகா வருக.
பரமா புருஷா வரந்தர வருக
கலங்கா தென்னையே காத்திடு முருகா
மலந்தா னணுகா வரந்தா முருகா
காவாய் முருகா கார்த்திகைக் குமரா
வாகா முருகா சாகா வரந்தா
வாவா முருகா வினைதீர்த் திடவே
யோகா முருகா பகைமாற் றிடவே
பொன்னடி போற்றி பணிந் திடவே
சென்னியி லுன்னடி ஓங் கிடவே
தேடிய நலங்கள் செறிந் திடவே
பாடிய புகழ்கள் மலிந்திடவே
கூடிய அன்பர் கும்பிடவே
அன்பாய் அவர்தாள் சூடிடவே
சூடிடவே யான் சூடிடவே
முருகா சரணம் முருகா சரணம்
முருகா சரணம் முருகா சரணம். 7

ஜய சிவ முருகா! ஜய சிவ முருகா!
ஜய சிவ முருகா! ஜய சிவ முருகா!

மங்களமான மலர் வனச்சோலை
தங்கிடு முருகா செங்கதிர் முருகா (ஜயசிவ)

பூந்திரு அழகிற் பொலிந்திடும் முருகா
தீந்தமிழ் எனவே தித்திக்கும் முருகா (ஜயசிவ)

மாணிக்க கங்கை வளமெனப் பெருகி
காணக் கண்குளிரும் காருண்ய முருகா (ஜயசிவ)

துன்பத்தை துரத்தி துயர்களை விலக்கி
அன்பரைக் காப்பாய் அருட்பெரு முருகா (ஜயசிவ)

முத்து முத்தாகச் சித்தர்கள் சூட்டும்
முத்தமிழ்மாலை மொய்த்த பொன்னழகா (ஜயசிவ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பொரு ளுண்மை மொழிந்திடும் முருகா
எப்பொருளுக்கும் உட்பொரு ளாவாய் (ஜயசிவ)

குமரா குழகா குருவே முருகா
அமரா அழகா அருளே முருகா (ஜயசிவ)

## முருகன் அழைப்பு.

அன்பருக்கு அன்பனேநீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய சோதியேநீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே வா வா முருகா
உரகநாபன் மருகனேநீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுகுடி வேலவாநீ வா வா முருகா
ஏறுமயில் ஏறியேநீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
ஆறுமுக வேலவனே வா வா முருகா
ஒப்பாரி வள்ளிலோலா வா வா முருகா
ஓங்கார தத்துவமே வா வா முருகா
ஔவைக் குபதேசித்தவா வா வா முருகா
அகில லோக நாயகனே வா வா முருகா
ஓடிவாநீ ஓடிவாநீ வா வா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ வா வா முருகா
வெற்றிவேல் முருகனுக்கு—அரஹரோஹர. 9

## சரஸ்வதி சிந்தனை

புத்தகத் துள்ளுறை மாதே
பூவிலமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடை யாளே
மூவுலகுந் தொழு தேவி
செப்புக வித்தன முலையாய
செவ்வரி யோடிய கண்ணாய்
முத்து நிறைந்த வெண்பலலாய்
முருக்கம் பூமேனி நிறத்தாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கோலந் தின்ற துவர்வாயே
சரஸ்வதி என்னும் திருவே
எக்காலு முன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணிவைப்பாய்
ஆக்கா யெம் பெருமாட்டி
அழகிய பூவணை மீதே
நோக்கா யென் மிடிதீர
நொடிக்கும் பிராமணத்தி நோக்காயே
சாலி நெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூஜை பண்ணி
பாலொடு பழத்தை நிரப்பி
பராவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமோஸ்து
ஞானக் கொழுந்தே நமோஸ்து
கல்விக் கரசே நமோஸ்து
சொல்லும் பொருளே நமோஸ்து
சூட்சுமச் சொரூபி நமோஸ்து.

வாணி ஸரஸ்வதி வாக்தேவி
பகவதி பாரதி, மாம்பாஹி
துர்க்கதி நாசினி, துர்க்கா ஜயஜய,
காலவினு சினிகாளி ஜயஜய.

## இலக்குமி தோத்திரம்.

செங்கமலம் பொலந்தாதிற் றிகழுந்தொளிரு
மெழின் மேனித் திருவே வேலை
அங்கணுல கிருடரக்கு மலர்க் கதிராய்
வெண்மதியாய் அமரர் கூட்டும்
பொங்கமுலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங் கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குளை நீ யவணன்றோ அல்லல் வளஞ்
சிறந் தோங்கி யிருப்பதம்மா.

## சிவகாமியம்மையார்.

மன்றின் மணிவிளக் கெனலா மருவுமுக நகை போற்றி
ஒன்றிய மங்கல நாணிநெளி போற்றி யுலகும்பர்
சென்று தொழவருள் சுரக்கும் சிவகாம சுந்தரிதன்
நின்றதிரு நிலைபோற்றி நிலவு திருவடி போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயிரவக் கடவுள்.

பரமனை மதித்திடாப் பங்கை யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமும்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

## திருநந்திதேவர்.

அங்கணன் கயிலைகாக்கு மகம்படித் தொழின்மை பூண்டு
நங்குரு மரபுக் கெல்லா முதற்குரு நாதனாகிப்
பங்கயத் துளவனாறும் வேத்திரப் படைபொறுத்த
செங்கையம் பெருமானந்தி சீரடிக் கமலம் போற்றி.

## சண்டேஸ்வரர்.

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த
புனிதற் கமைக்கும் பொருளன்றி
மின்னுங் கலனுடைகள் பிறவும்
வேறு தனக் கென்ற மையாமே
மன்னுந் தலைவன் பூசனையில்
மல்கும் பயனையடி யார்கள்
துன்னும்படி பூசனை கொள்ளுந்
தூயோன டித்தாமரை தொழுவாம்.

## திருமந்திரம்.

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியுமே.

மலைமேல் மழைபெய்ய மான்கன்று துள்ளக்
குலைமேல் இருந்த கொழுங்கனி வீழ
உலைமேல் இருந்த உறுப்பெனக் கொள்வன
முலைமேல் அமிர்தம் பொழிய வைத்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி கடிகமழ் சந்தனம்
வா[illegible]று விட்டு வாழ்த்தி வணங்கினும்
ஊனினை நீக்கி உண்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேர வொண்ணாதே.

## தாயுமான சுவாமிகள் பாடல்

வஞ்சனை அழுக்கா றாதி வைத்திடும் பாண்ட மான
நெஞ்சனை வலிதின் மேன்மேல் நெக்குநெக் குருகப் பண்
அஞ்சலி செய்யுங் கையும் அருவிநீர் விழியு மாகத் [ணி
தஞ்சமென் றிரங்கிக் காக்கத் தற்பரா பரமு னக்கே.

ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல் லாங்கட்டி
ஆளினுங் கடல் மீதிலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவரெல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும்நான் நானெனக் குளறியே
ஒன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... ஒ ... பு ...
கொண்டுசில பிணிதீர்த்துப ... ரே
கல்லாய்ப் பிறந்தாலும் நல்லவர்கள் ம ... ண்டு
காட்சிக் குறுத்து மன்றே
கழுதையுரு வந்தாலும் ஆவெனக் கத்தினல்
கைகண்ட சகுனமென்பார்
எல்லா மில்லாமலே யிப்பிறவி தந்தென்னை
ஏங்கவிட் டகல நின்ருய்
எத்தனை அன்னையின மெத்தனை தந்தையின
மெத்தனை பிறவி வருமோ
அல்லலெனு மாசறுத்தாட் கொளுந் தெய்வமே
அப்பனே தில்லைநகர் வாழ்
அதிபதி ஜனகாதி துதிபதி சிவகாமி
அன்பினுறை நடனபதியே.
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

## நுணுவில் குளக்கோட்டு விநாயகர் துதிகள்.

பாடும் குளமும் மருதும் பகர் சிறப்பாக்
கூடும் நுணுவிற் குளக்கோட்டாய் — வாடும்
மனத்தார் பாவித்துயர்தீர் மழ களிறே
அனைத்தும் தருவா யறிந்து.

கற்றவர் ஏத்துங் கவின்கொள் நுணுவிற் கரிமுகனே
பற்றென்று மின்றிப் பரிதவிக் கின்ற தமியனுக்கிங்
குற்றன நல்கி உறுதுயர் தீர்த்துன் அருட்கடல்தான்
உற்றிடி னுள்ளேன் பிறதெய்வம் இந்த உலகினிலே.

ஔவைதன் பூசைக் கதியன்பு காட்டி அவள் மகிழச்
செவ்வியிற் கைலையில் சேர்த்தாய் நுணுவிற் பதிசிறக்க[ய்
எவ்வமில் கோயில்கொண் டெங்க ளிடர்களைந் தன்புதவா
பவ்வமுண் டேயருள் பண்ணவ நின்கழல் பற்றினனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறும் பிறையு மிலகு சடைமேல்
ஆருங் கொன்றை மலர்மாலை
ஏறொன் றுடைய அண்ணல் எழிலார்
நீறுந் திகழுஞ் சிவனுடனே
கூறொன் றுமையும் பயந்த முதல்வன்
கூறும் கயமா சுரனை
வீறன் றழித்த பெருமான் நுணுவிற்
குளக் கோட்டுறையும் விநாயகனே.

தொழுவார் மலக்கட் டறுக்கும் திருவே
தொன்றுள் மாலு மயனும்
தொழுமா பிழம்பா யிடையே தோன்றும்
துகடீர் மறைகூ றிறைவன்
மழுவார் கரத்தான் சிறுவ மதித்தே
அழுவார் துயரம் மாய
வழுவா தருளும் நுணுவில் குளமும்
மருது முடையானை முகனே.

நிட்டை கூடும் ஞானி நிகரில்
யோகி நிறைவார் கிரியை
மட்டில் நிற்கு மடியார் மலங்கள்
மாற்றும் மருள்தீ ரிறைவா
கட்டும் குளமும் மருதும் மிளிரும்
கதிசேர் நுணுவிற் பதியாய்
கட்டை வேலிக் கழகச் சிறுவர்க்
கருள்வாய் கரிமா முகனே.

## திருப்புகழ்.

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கின் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

r M. Rajathurai
 Yarn

# கந்தவனத் திருப்புகழ்

உறவுசிங்கிகள் காமாகாரிகள்
முறைமசிங்கிக ளாசாவேசிகள்
உதடுகன்றிகள் நாணாவீணிகள் நகரேகை

உடையகொங்கையின் மீதேதூசுகள்
பிணமெனும்படி பேய்கீராகிய
உணவைஉண்டுடைசோர்கோமாளிகள் கடல்ஞாலத்

தறவுநெஞ்சுபொ லாமாபாவிகள்
வறுமைதந்திடு பாழ்மூதேவிகள்
அணிநெருங்கிக ளாசாபாசன மடமாதர்

அழகுயர்ந்தபொய் மாயாரூபிகள்
கலவியின்பமே ஞாவேசோருதல்
அலமலர்ந்தடு மாறாதோர்கதி அருள்வாயே

பறவையென்கின்ற கூடார்மூவரன்
முறையிடுந்தமர் வானோர்தேரரி
பகழிகுன்றவி லாலேநீறெழ ஒருமூவர்

பதனிணைந்துவி டாதேதாள்பெற
அருள்புரிந்த பிரானார்மாபதி
பரவு*கந்த சுவாமிகானகம் அதின்மேவும்

குறவர்தங்கள் பிரானேமாமரம்
நெறுநெறண்டடி வேரோடேநிலை
குலையவெற்றிகொள் வேலேஏவிய புயவீரா

குயில்கள்அன்றில்கள் கூகூகூவென
மலர்கள்பொங்கிய தேன்வீழ்காமிசை
குறவர்சுந்தரி யோடேகூடிய பெருமாளே.

*கந்தசுவாமி கானகம் — கந்தவனம்.

திருச்சிற்றம்பலம்.

---

கரவெட்டி கிழக்கு திரு. கு. சிவபாதம் ஆசிரியர் அவர்களால்
பருத்தித்துறை ஊழியன் அச்சகத்தில் அச்சிடுவித்து கரவெட்டி கிழக்கில்
வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org